திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், பெ.சு.தி. சரவணன், ப.கார்த்தி வேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஸ்குமார், டி.திலீப்குமார், செல்வபிரகாஷ், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.

'முதல்வரே பல்கலைக்கழக வேந்தர்' என்ற தி.மு.க. அரசின் நடைமுறையைப் பின்பற்றும் கட்டாயம் கிடையாது – என்ற

த.வெ.க. அரசின் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதனுக்கு கண்டனம்!

திருவண்ணாமலை இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்; முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, மே 30- மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பை தி.மு.க. இளைஞர் அணி கண்டிக்கிறது என்கிற பல்வேறு தீர்மானங்கள், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

28.05.2025 வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என். அண்ணாதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதிஷ்குமார், டி.திலிப்குமார், செல்வம்பி ரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. சட்டமன்ற கட்சியின் தலைவராக, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், துணைத் தலைவராக கே.என்.நேரு அவர்களையும், கொறடாவாக எ.வ.வேலு அவர்களையும், செயலாளராக தங்கம் தென்னரசு அவர்களையும், பொருளாளராக எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்களையும், துணை கொறடாவாக கோ.வி. செழியன் அவர்களை தேர்ந்தெடுத்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள்!

நவீன தமிழகத்தை கட்டமைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலஉதவிகளோடு வருடம் முழுவதும், முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் கொண்டாடுவதென இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழ்த் தாய் வாழ்த்தை மூன்றாமிடத்திற்கு தள்ளிய தோடு மட்டுமல்லாமல் விஜய் அரசு தோ்தல் வாக்குறுதியில் இரண்டரை ஏக்கர் விவசாய நிலம் வைத்திருப் பவர்களுக்கு முழு கடன் தள்ளுபடி என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத் துள்ள விவசாயிகள், வங்கியில் வாங்கிய கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்வ தாக கூறிவிட்டு, வெற்று அறிவிப்புகள் கொடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஜோசப் விஜய் அரசை இந்த கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

மீண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட, சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அவர்களின் தலைமையில் நமது மாவட்ட இளைஞர் அணி உண்ணாமல், உறங்காமல், ஓய்வுகொள்ளாமல் பணியாற்றுவதென தீர்மானிக்கிறது.

பல்கலைக் கழகத்திற்கு வேந்தர்களாக, அம்மாநில முதல்வர்களே இருக்கலாம் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றியும், ஆளுநர் ஒப்புதலோடு, இந்திய நாட்டின் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதோடுமட்டுமல்லாமல் உச்சநீதிமன்றத்தின் மூலம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளும் கிடைத்து, இந்திய நாடே கொண்டாடியது.

ஆனால், தற்போது, புதிய மாநில அரசு, மாநில சுயாட்சிக்கு எதிராக, தமிழக முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற தி.மு.க. அரசின் நடைமுறையை பின்பற்றும் கட்டாயம் எங்களுக்கு கிடையாது என்கிற, த.வெ.க. அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் அவர்களின் அறிவிப்பிற்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகர செயலாளர் மு.அன்பழகன், பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, ப.முருகையன், எம். சீனுவாசன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறினார்.

கழக மாநில கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

சேர்காடு கென்னடி மணி விழா - பணி நிறைவு பாராட்டு விழா!

பொதுச் செயலாளர் துரைமுருகன் – டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வாழ்த்துரை!

வேலூர், மே 30 - வேலூர் வடக்கு மாவட்டம், காட்பாடி தொகுதியில் வாழ்ந்து வரும், கழக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு. கென்னடி அவர்களுக்கு வரும் 2.6.2026 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில், பணி நிறைவு பாராட்டு விழா மற்றும் மணிவிழாவும், காட்பாடி விருதம்பட்டு, ஆல்காட் நினைவாலய அரங்கத்தில் நடைப்பெற உள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் தலைமை தாங்கிட, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் (ம) முரசொலி தமிழ் மன்றம் நிறுவனர் சி.கோபி வரவேற்றிட, என். பரமசிவம், என்.தேவநேசன், எச் அரிகிருஷ்ணன், நித்ய குமார், சு. கெஜராஜ், கோவி. அழகிரி ஆகியோர் முன்னிலை வகிக்க,

கழக பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் திராவிட செம்மல் துரை முருகன், வேலூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி மற்றும் கிங்ஸ்டன் கல்விக் குழுமத்தலைவர் சங்கீதா கதிர் ஆனந்த் ஆகியோர் பாராட்டி வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் மாநகர துணை மேயர் சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மாநகர மண்டல தலைவர் புஷ்பலாதா, ஒன்றிய செயலாளர்களான ஆர் கே.தேவேந்திரன், எஸ்.சரவணன், வன்னிய ராஜா, வி.தயாநிதி, கருணாகரன், தணிகாஜலம், ஜி.ரமேஷ், பிரம்மபுரம் பழனி, எல், ரவிச்சந்தின், பரமசாத்து ரவி, கே.சீதாராமன், நேரு, ஏ.கே முருகன், முருகபெருமாள், கே.தயாளமூர்த்தி. லோகநாதன், வாசுகி கோடீஸ்வரன், டீடா சரவணன், சீனிவாசன் சா.பரிமளம், கிருபாகரன், கே.ஏ. கண்ணன், சாந்தகுமார், ஸ்டாலின் தயாநிதி, முடினாம்பட்டு குப்பன், மரு.கோவி தாயவன், மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

முடிவில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் சேர்காடு கென்னடி அவர்கள் ஏற்புரை ஆற்றிட, நித்யா பிரியா பியூலா (மனைவி) கெ.சாரதா மேரி (மகள்) ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்வை முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்கிறது.

தகுதித் தேர்வில் விலக்கு அளிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு:

வீர வசனம் பேசாமல் ஆசிரியர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பீர்!

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, மே 30- "TET தேர்வு, ஆசிரியப் பெருமக்களைப் பாதுகாக்கும் பணியில் உடனே இறங்குங்கள். தயவுசெய்து வீரவசனம் வேண்டாம்" என்றும். "இன்று உச்சநீதி மன்றத்தில் நடைபெற்ற சீராய்வு மனுக்கள் மீதான விசாரணையில், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வில் இருந்து முழுமையாக விலக்கு அளிக்க திட்டவட்டமாக மறுத்துள்ளதோடு. மேலும் ஓராண்டு கால நீட்டிப்பும் வழங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது" என பள்ளிக் கல்வித்துறையின் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"பணியில் இருக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு"(TET) கட்டாயம் என 01.09.2025 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுவதற்கும். பணியில் தொடர்வதற்கும் ஆசிரியர் தகுதித் தேர்வு கட்டாயம் எனவும். இரண்டு ஆண்டுகளுக்குள் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தமிழ்நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மூத்த ஆசிரியர்களைப் பாதுகாக்கும் வகையில், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி தீர்ப்பு வந்த மறுநாளே, எனது தலைமையில் உடனடியாக ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆசிரியர் சங்க பொறுப்பாளர்களை அழைத்து இரண்டு முறை விரிவான கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தினோம்.

ஒரு ஆசிரியர் கூட உச்சநீதிமன்ற தீர்ப்பினால் பாதிக்கப்படாத வகையில் தமிழ்நாடு அரசு ஆசிரியர்களுக்குத் துணை நிற்கும் என்ற உத்தரவாதத்தை வழங்கியதால், ஆசிரியர்கள் மனச்சுமையின்றி பணியாற்றும் சூழலைத் திராவிட மாடல் அரசு உருவாக்கியது. மேலும், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களோடு நானும் பள்ளிக் கல்வித்துறை உயரதிகாரிகளும் உடனடியாக ஆலோசனை நடத்தினோம்.

தொடர்ந்து, உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு சீராய்வு மனுவைத் தாக்கல் செய்வது என்றும், மூத்த ஆசிரியர்கள் ஒருவர் கூட பாதிக்கப்படாமல் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பாதுகாக்கும் என்றும், ஆசிரியர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல்

இருக்கத் திராவிட மாடல் அரசு துணை நிற்கும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் விரிவான அறிக்கையின் மூலம் தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு சீராய்வு மனுவினைத் தாக்கல் செய்வதற்கு, 'வில்சன் அல்ல வின்சன்' என்று முத்தமிழ் அறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வில்சன் உள்ளிட்ட வழக்கறிஞர்களோடு தமிழ்நாடு அரசு ஆலோசனை நடத்தி, உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்திலும் இதுகுறித்து ஆலோசனை வழங்கினார். இந்தியா முழுவதும் உள்ள ஆசிரியர்களைப் பாதுகாக்கப் நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவர வலியுறுத்த வேண்டும் என்கிற அன்றைய முதலமைச்சரின் அறிவுரைப்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் சட்டத்திருத்தம் குறித்து வலியுறுத்தினார்கள். இத்தகைய தொடர் நடவடிக்கைகள் மூலமாக ஆசிரியர் சமூகத்தைக் காத்து வந்தது தி.மு.க அரசுதான் என்பது ஆசிரியர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

இத்தகைய நிலையில், இன்று உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற சீராய்வு மனுக்கள் மீதான விசாரணையில், ஏற்கனவே பணியில் உள்ள ஆசிரியர்களுக்குத் தகுதித் தேர்வில் இருந்து முழுமையாக விலக்கு அளிக்கதிட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, மேலும் ஓராண்டு காலநீட்டிப்பும் வழங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பதவி உயர்வுக்குத் தகுதித் தேர்வு கட்டாயம் என்பதில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகளால், ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் முதல் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட பல்வேறு பதவி உயர்வுகள் வழங்கப்படாததால்நிர்வாகப்பணியிடங்களில் சுணக்கம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இது பல ஆண்டுகால அனுபவமுள்ள மூத்த ஆசிரியர்களுக்குப் பெரும் சுமையாகவே அமையும். திராவிட மாடல் அரசின் சிறப்பு முயற்சியால் ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்காக சிறப்பு தகுதித் தேர்வு நடத்தப்படும் என்று அரசாணை: 231, நாள் 25.10.2025 அன்று வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஆசிரியர் தகுதித் தேர்வில் ஆசிரியர்களின் நலன் கருதி, தேர்ச்சி பெறுவதற்கான மதிப்பெண்ணில் 5 சதவீதத் தளர்வும் வழங்கப்பட்டது. இதனால் ஏராளமான ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

மேலும், சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் அனைத்து ஆசிரியர்களுக்கும் உதவிடும் வகையில், அதற்கான பயிற்சிக் கட்டகங்கள் (Training Modules) தயாரிக்கும் பணி மற்றும் இணையவழிப் பயிற்சி வழங்கும் பணியானது, ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடம் (SCERT) ஒப்படைக்கப்பட்டது. ஆனால், ஜூலை மாதம் முதல் வாரம் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்பட உள்ள நிலையில், இதுவரை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கட்டகங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இணையவழிப் பயிற்சி குறித்தும் எவ்வித அறிவிப்பும் இல்லை. ஆகவே, 'ரீல்ஸ்' அரசாகத் திகழும் இன்றைய தமிழ்நாடு அரசு வீரவசனம் பேசி அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுபோல, இவ்விரண்டையும் எளிதாகக் கடந்து சென்றுவிடாமல் உடனடியாக நம்முடைய ஆசிரியர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

ஒன்றிய அரசை வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் சிறப்புச் சட்டத்திருத்தம் கொண்டு வரச்செய்து, தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியா முழுமைக்குமாகப் பணியில் உள்ள மூத்த ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிற்சிக் கட்டகங்கள் மற்றும் இணையவழிப் பயிற்சி குறித்தும் தெளிவான விளக்கம் அளிக்க வேண்டும். எங்கள் குடும்ப உறுப்பினர்களான ஆசிரியர்களுக்கு எப்போதும் நாங்கள் துணை நிற்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்".

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டம்

கலைஞர் நகர் தெற்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் அறிக்கை!

சென்னை, மே. 30 - கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி, மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (30.05.2026 - சனிக்கிழமை) மாலை 6 மணியளவில், எம். ஜி.ஆர். நகர் மார்க்கெட்டில் அமைந்துள்ள ஓம் ஸ்ரீ சேர்மன் திருமண மண்டபத்தில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு முன்னாள் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ். செழியன், பிகே.குமார், அ. கதிரேசன், கே. சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், ஜம்பு.முருகன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் டி.அசோக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

இதில் கலைஞர் நகர் தெற்கு பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள்:- ஜூன் 3 கலைஞர் பிறந்த நாள் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு கலைஞர்நகர் தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச். தினேஷ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழகத்தின் துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா எம்.பி, பட்டவர்த்தியில் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொது செயலாளருமான மு.சண்முகம் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து உடல் நலம் விசாரித்தார். அருகில் மாவட்ட செயலாளர்கள், துரை.சந்திரசேகர், சாக்கோட்டை க.அன்பழகன், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீசன் மற்றும் பந்தல் சிவா, பாண்டியன் (தொமுச பேரவை துணை தலைவர்), பெரும்பாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.கே.பாஸ்கர் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.